CC-O. In Public Domain. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி
சங்கராசார்ய மஹாஸ்வாமிகளின்
அருளுரை

தொகுப்பு—19

புலன்களில் பற்றுதல் அழிவையே தரும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-0. Omkar Nath Shastri Collection Trust, Delhi. Digitized by eGangotri

ஸ்ரீ சிருங்கேரி சங்கராசார்ய
மஹாஸ்வாமிகளின் அருளுரை

தொகுப்பு-19

புலன்களிலுள்ள பற்றுதல் அழிவையே தரும்

வெளியிடுவோர் :

ஸ்ரீ சாரதா டிரஸ்ட்,
பாரதி தெரு, சிருங்கேரி-577 139.

[விலை ரூ. 1-50

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Copies can be had from :
The Publication Manager,
Sri Sharada Trust,
(Madras Office)
Sri Sringeri Math Buildings,
No. 11, Venkatnarayana Road,
MADRAS-600 017.
Phone No. : 442041

Printed at :
Commonwealth Press,
4, Pitchu Pillai Street,
Mylapore, Madras-600 004.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri



சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸன்னிதானம்

Sri Vidyabharathi Book Centre, Shringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

முன்னுரை

சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ மஹாஸன்னிதானம் அவர்கள் 1977-ம் ஆண்டு தமது சென்னை யாத்திரியையின்போது 'ஆஸ்திக ஸமாஜம்' (ஆழ்வார்ப்பேட்டை) அரங்கத்தில் அருளுரையொன்று நிகழ்த்தினார்கள். ''மனிதன் தான் நீலை யாக வாழ்ந்து கொண்டிருக்கலாம் என நினைத்து, புலன்களி னால் ஏற்படக்கூடிய சிற்றின்பத்தில் ஈடுபட்டு அவைகளினு லேயே அழிவும் பெறுகிறான். ஆகவே புலன்களை அடக்குதல் மிகவும் இன்றியமையாததாகும்'' என வலியுறுத்துகிறார் ஜகத்குரு. ஸ்ரீ சாரதா டிரஸ்டின் 'ஆசார்யாளது அருளுரை கள்' தொகுப்பில் 19-வது புத்தகமாக விளங்கும் இவ் வருளுரையைத் தொகுக்கத் திருவாளர்கள் கோ. இராம சுப்ரமணியனும், இரா. ஸ்ரீராமனும் துணைபுரிந்துள்ளனர்.

இப்படிக்கு,

இரா. மு. உமேஷ்,
ஸ்ரீ சிருங்கேரி ஜகத்குரு
சங்கராசார்ய மஹாஸ்வாமிகளின்
பத்திரிகைச் செயலாளர்.

பெங்களூர்
8-1-84

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

புலன்களிலுள்ள பற்றுதல் அழிவையே தரும்

கங்காபூரப்ரசலித ஜடாச்ரஸ்த போகீந்த்ரபீதாம்
ஆலிங்கந்தீம் அசலதனயாம் ஸஸ்மிதம் வீக்ஷமாண: |
லீலாபாங்கை: ப்ரணதஜனதாம் நந்தயம்ச்சந்த்ரமௌலி:
மோஹத்வாந்தம் ஹரதுபரமானந்த மூர்த்திச்சிவோன:||

எல்லோருக்கும் இறைவனுடைய பாதாரவிந்தங்களில் மனதை வைப்பது மிகவும் பிடித்தமான ஒன்று. ஆனால் ''எவ்வளவு நாள் ஆன்மீக சாதனைகள் மற்றும் அனுஷ்டானங்களைச் செய்தாலும்கூட இன்னும் பகவானுடைய அருள் கிடைக்கவில்லையே, நான் என்ன பரிகாரம் செய்ய வேண்டும்'' என்று ஒருவன் கேட்கலாம். இதற்கான காரணத்தை இப்போது ஆராய்வோம். அனைவருக்கும் பகவானுடைய சாக்ஷாத்காரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆசை உண்டு. அதற்கான ஏதாவது சாதனை மேற்கொள்ள வேண்டும், என்று ஆசையும் உண்டு. ஆனாலும் அவர்கள் ஏன் தங்களுடைய இலக்ஷியத்தை அடைய முடியவில்லை யென்றால், அது விஷயமாக நீலகண்ட தீக்ஷிதர் ஓரிடத்தில்,

காமம் ஜன: ஸ்மயந்தே கைலாஸவிலாஸவர்ணனவஸரே |
ஸாதனகதனவஸரே ஸாசிகுர்வந்தி வக்த்ராணி ||

(கைலாசம் வர்ணிக்கப்படுகையில் மக்கள் மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள். ஆனால் 'ஸாதனைகள்' (ஆன்மிக வழிகள்) வர்ணிக்கப்படுகையில் அவர்கள் தங்கள் முகத்தைத் திருப்பிக் கொண்டு விடுகிறார்கள்.)

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என்று கூறியிருக்கிறார். புராணங்களில் நாம் கைலாச நாதரைப் பற்றி படிக்கும்போது நமது மனதில் மகிழ்ச்சி யுண்டாகிறது. இப்படிப்பட்ட கைலாசநாதரை ஒரு தடவை யாவது நம்மால் பார்க்க முடியாதா என்ற ஆசையும் உண் டாகிறது. ஆகவே, கைலாசத்தைப் பற்றிக் கேட்கும்போது மிகவும் திருப்தியடைந்து விடுவார்கள் மக்கள். ஆனால் அப்படிப்பட்ட கைலாசநாதரின் சாக்ஷாத்காரம் கிடைக்க வேண்டுமென்றால் நாம் செய்ய வேண்டியது என்ன என்ற விஷயத்தைச் சொல்லும்போது,

'ஸாதனகதனுவஸரே ஸாசிகுர்வந்தி வக்த்ராணி'

என்று கூறப்பட்டது போல் ''இவையெல்லாம் நடக்காமல் இருக்கப்பட்ட சாதனங்கள், இவையெல்லாம் நம்மால் செய்ய முடியாது,'' என்ற தீர்மானத்திற்கு மக்கள் வந்து விடுவார்கள். ஏன் அவர்கள் இவ்வாறான தீர்மானத்திற்கு வரவேண்டுமென்றால்,

'இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்தே ராகத்வேஷௌ
வ்யவஸ்திதௌ |
தயோர்ன வசமாகச்சேத்தௌ ஹ்யஸ்ய பரிபந்தினௌ ||'

(இந்திரியங்களுக்கு விஷயங்களில் விருப்பு, வெறுப்பு உண்டு. அவைகளுக்கு வசப்படலாகாது. அவைகளே அவனுக்கு எதிரிகள்.)

என்று கீதையில் பகவான் கூறியிருப்பது போல், புலன்களுக்கு விருப்பு, வெறுப்பு என்ற இரண்டும் பார்க்கப்பட்டவர்களாய் மனிதர்கள் இருக்கிறார்கள்.

சாஸ்திரங்களில் அவரவர்களுக்கு விதிக்கப்பட்ட கர்மாக் களைக் குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்பட வேண்டும் என்றா லும் அவைகளைச் செய்வதிலேயே ஜனங்களுக்கு அவ்வளவு சுவாரசியம் இல்லை. உதாரணத்திற்கு சூர்ய அஸ்தமனத்தின்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

போது ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டுமென்று சாஸ்திரங்களில் கூறப்பட்டால் அவர்கள் அப்போதுதான் வேறு பல காரியங்களைச் செய்து கொண்டிருப்பார்கள். ஏனென்றால் ஸந்த்யாவந்தனம் செய்வதில் சுவாரசியமே இல்லை. ''உங்களுக்கு நேரம் கிடைக்கும் போது செய்யலாம்'' என்று சொன்னால் அவர்கள் ஒருவேளை செய்யலாம். ஆனால் நம்முடைய முன்னோர்கள்,

ஸந்தெள ஸந்த்யாமுபாஸீத

(ஸந்த்யையை ஸந்தியில் பூஜிக்க வேண்டும்.)

என்று கூறியிருக்கிறார்கள். ஆனால் அப்போது அவர்களுக்கு ஏதாவது ஒரு சினிமாவுக்குப் போகவேண்டியிருந்தாலோ, நாடகத்திற்குச் செல்ல வேண்டியிருந்தாலோ அல்லது ஏதாவது ஒரு பாட்டுக் கச்சேரிக்குச் செல்லவேண்டியிருந்தாலோ அவைகளில்தான் அவர்கள் கவனம் இருக்குமே யொழிய ஸந்த்யாவந்தனம் செய்வதில் ஒருபோதும் அவர்கள் அக்கறை காட்ட மாட்டார்கள்.

'இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்தே...'

என்று இறைவன் கூறியதுபோல் ஒருவன் தன்னுடைய புலன்களை யெல்லாம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு தன்னுடைய சிரேயஸ்ஸிற்குப் பாடுபட வேண்டும் என்று அறிவுரை கொடுத்தாலும் கேட்பதற்குச் சிலர் தயாராயில்லை. நாம் கேட்பதற்குத் தயாராய் இருக்கிறோம். ஆனால் யார் என்ன உபதேசம் செய்தாலும்கூட ''கேட்கும்போது மிகவும் நன்றாயிருக்கிறது'' என்று கூறுவோம். ஆனால் அதை அவ்வாறு அனுஷ்டானம் செய்யும் சமயத்தில் ''அவை மிகவும் கஷ்டமானவை; இந்தக் கலிகாலத்தில் இதை யார் செய்ய முடியும்? சற்றே எளிதாயிருக்கப்பட்டவற்றை மட்டும் செய்தால் போதாதா? ஆகையால் எளிதாயிருக்கப்பட்ட கர்மாக்களை மட்டும் செய்கிறேன்'' என்று கூறுவோம்.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இது சம்பந்தமாக அப்பய்ய தீக்ஷிதர் ஒரு ஸ்லோகத்தில்,

உபாயம்தே சேத: பரமமுபதிசாமி ஸ்மாரரிபோ:
பதாம்போஜத்வந்த்வே பரவசதயா ரஜ்ஜுஸி யத: |
அவச்யம் போக்தவ்யாம் அனுதினம் அதர்க்யோsவகமனும்
தசாம் அன்யாம் ஸபரிகணய உபஸ்திததராம் ||

(மனமே! உனக்கு உத்தமமான வழியைச் சொல்கின் றேன். நீ காமதேவனின் எதிரியினது பாதகமலங்களில், மற்ற விஷயங்களில் சிந்தனையுடையவனுக இருந்து, விரும்பு கிறாய். ஆதலால் தினந்தோறும் அவசியமாக, சிந்திக்க முடியாத கதியை அனுபவித்தே ஆகவேண்டும். மற்றொரு நிலையை எண்ணுவாய்.)

என்று கூறியிருக்கிறார்.

இதே விஷயமாக நீலகண்ட தீக்ஷிதர் மிகவும் அருமை யாக சுலோகம் ஒன்றைக் கொடுத்திருக்கிறார்.

வேதா வா ஸ்யு: விததரசனு: விஸ்மரேதீச்வரோ வா
தர்மாதர்மஸ்திதிவிரசனும் அந்தகோ வா ம்ருஷாஸ்யாத் |
நித்யோ வா ஸ்யாம் அஹமிதி பஹுனுல்லிகந்த: ஸமாதின்
வேதோ வ்ருத்த்யா முதிதமனஸ: ஸர்வதோ நிர்வ்ருதா:
ஸ்ம: ||

(வேதங்கள் வீணை தொகுப்புகலாகலாம். தர்மத்தை யும் அதர்மத்தையும் எவ்வாறு வகுப்பது என்பதை ஈச்வரன் மறக்கலாம். அல்லது யமன் பொய்யாகவும் நான் நிலையாக வும் இருக்கலாம். இவ்வாறு பலர் விளக்கம் கொடுப்பர். மகிழ்ச்சியான மனமுடையவர்களாய் நாங்கள் (இதுபோன்ற) எல்லாப் பக்கங்களிலிருந்தும் திரும்பி விடுகிறோம்.)

ஒருவன் ''நான் பரமசிவனைப் பற்றிய சிந்தனையே செய்ய வில்லை, செய்ததுமில்லை. ஆனால் மிகவும் திருப்தியாக இருக் கிறேன். திருப்தியாக இருக்கும் ஒருவன் ஏன் பரமசிவனைப்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

பற்றிய சிந்தனையைச் செய்ய வேண்டும்? யாருக்கு உலகத்தில் திருப்தியில்லையோ அவர்கள் தான் பரமசிவனைப் பற்றிய சிந்தனை செய்ய வேண்டும். நானே திருப்தியாக இருக்கிறேன். ஆகையால் நான் எதற்காகச் சிந்தனை செய்ய வேண்டும்'', என்று கேட்கிறான். ஆனால் அவனுடைய இந்தக் கேள்வி மிகவும் தவறானதாகும் என்பதை நாம் இப்போது பார்க்கப் போகிறோம்.

உலகத்தில் எவ்வளவோ கஷ்டங்களை மனிதர்கள் அனுதினமும் அனுபவித்துக் கொண்டிருக்கின்றனர். வேதத்தில்,

அஹரஹ: ஸந்த்யாமுபாஸீத

(தினந்தோறும் ஸந்த்யா உபாஸனையைச் செய்ய வேண்டும்.)

ஸத்யான்ன ப்ரமதிதவ்யம் | தர்மான்ன ப்ரமதிதவ்யம் |

(உண்மை விஷயத்தில் கவனக் குறைவு கூடாது. தர்ம காரியங்களிலிருந்து தவறவே கூடாது).

ஸ்வாத்யாயப்ரவசனுப்யாம் ந ப்ரமதிதவ்யம்

(கற்பதிலும் கற்பிப்பதிலும் கவனக் குறைவுடனிருக்கக் கூடாது.)

என்று பலவித கர்மாக்களை மனிதர்களுக்கு விதிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் பல சட்டங்களை வகுத்திருக்கின்றது. அதேபோல் இறைவன் எல்லா அரசாங்கத்திற்கும் மேலே இருக்கப்பட்ட அரசாங்கம் ஆதலால், அவர் கூறியிருக்கும் வேதங்களை ஒருவன் கடைப்பிடிக்கவில்லை யென்றால் இறைவன் அரசாங்கத்தைப் போலவே தண்டனை கொடுக்கத்தான் செய்வான். இதனை ஒருவன் யோசனையே செய்வதில்லை. நாம் இன்று வாழும் நாட்டில் உள்ள அரசாங்கத்தின் சொற்படி கேட்காவிட்டால், பிறகு நம்மை இந்த இராஜ்யத்திலிருந்தே வெளியேற்றி விடுவார்கள் என்ற பயத்தினால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''சட்டங்களை ஒத்துக்கொள்ள முடியாது'' என்று கூற நம்மால் இயலாது. ஆனால் இறைவனுடைய விஷயத்தில் மட்டும் மக்கள், ''ஏன் அவனுடைய கட்டளைகளை நிறை வேற்ற வேண்டும்'' என்ற எண்ணமுடையவர்களாக இருக் கிறார்கள். ஏனென்றால் இறைவனுடைய கட்டளைகள் அனைத்தும் வீண் என்று அப்படிப்பட்ட மனிதர்கள் நினைக் கிறார்கள்.

பொய்யாய் உள்ள சாஸ்திரங்களை ஏன் ஒப்புக்கொள்ள வேண்டும். அவைகளெல்லாம் அநாவசியம் என்று அவர்கள் நினைக்கிறார்கள்.

இறைவன் இப்போதுதான் பிறந்தான் என்றில்லை. அவனுடைய பிறப்பு அநாதியானது. ஆனாலும் சிலருக்கு ஒரு கேள்வி. ''சாதாரணமாக உலகத்திலுள்ள மனிதர்களுக் கெல்லாம் ஐம்பது வயது அல்லது அறுபது வயது ஆகி விட்டால் மறதி என்பது வந்துவிடுகிறது. ஆனால் ஐம்பது அல்லது அறுபது வயதுக்காரர்களுக்கு மறதி வருவது சகஜம் என்ற நிலையில் மிகவும் புராதனமாய் இருக்கப்பட்டதால் அவனுக்கு ஏன் மறதி வரக்கூடாது? ஏதோ படைக்க ஆரம் பித்த பிறகு இறைவன் வேதங்களை உபதேசித்துவிட்டான். இப்பொழுது அவனுக்கு மிகவும் வயதாகிவிட்டது. இந்த நிலையில் அவன் அவ்வளவு விஷயங்களையும் தன்னுடைய நினைவில் வைத்துக் கொண்டிருக்கிறான் என்று எவ்வாறு கூற முடியும்? இறைவனுக்கு தான் இட்டிருந்த கட்டளைகளெல் லாம் நினைவில் இருக்குமென்றால் அப்பேற்பட்ட சூழ்நிலையில் அவன் தவறிழைக்கும் மக்களுக்குத் தண்டனை கொடுத்தால் பரவாயில்லை. இறைவனுக்குத் தான் இட்டக் கட்டளைகள் மறந்து போகாதா'' என்பதுதான் கேள்வி.

இறைவனுக்கு எல்லாமே ஞாபகம் இருக்கும். இறைவன் எல்லாச் செயல்களையும் செய்வதற்குச் சக்தி வாய்ந்தவன், அதாவது 'ஸர்வ சமர்த்தன்' என்று கூறப்பட்டிருக்கிறது. சமர்த்தனாக இருக்கப்பட்ட ஈச்வரனுக்கு ஞாபக மறதி எவ்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

வாறு வரும்? சிலர் ஐம்பது வயது வந்தவுடனேயே எங்க ளுக்கு மறதி வந்துவிட்டது என்று கூறுவர். ஆனால் நாம் சில ரைப் பார்க்கிறோம். அவர்களுக்கு எண்பது வயதானாலும் கூட ஞாபக மறதி என்பது சிறிதளவும் இருக்காது. சாமான்ய மான இத்தகைய மனிதர்களுக்கே வயதானாலும் அவ்வாறு இருக்க முடியுமானால் இறைவனுக்கு ஏன் மறதி வரவேண் டும்? நாமெல்லாம் சமர்த்தர்கள். அதாவது சாமர்த்திய சாலிகள் என்ற பெயரை வைத்துக் கொண்டால் இறைவன் 'ஸர்வ சமர்த்தன்'. அதாவது எல்லாவற்றையும் செய்யும் சக்தியுடையவன். ஆகவே அவனுக்கு மறதி என்பது கிடையாது.

ஆகவே இறைவன், ''என்னுடைய சட்டங்களை நீ மதித்து நடப்பதில்லை. இதனால் நீ தண்டனை அனுபவிக்க வேண்டும்'', என்று தாராளமாகக் கூறலாம். இதோ அடுத்த எதிர்ப்பு. நீதிமன்றத்தில் ஏதாவது தீர்ப்புக் கொடுக்கலாம். ஆனால் நீதிமன்றத்தில் தீர்ப்பைக் கொடுத்ததற்குப் பிறகு அந்த நீதிமன்றத்திலுள்ள அதிகாரிக்கு மேற்கொண்டு எந்த ஒரு வேலையும் செய்ய முடியாது. போலீஸ்காரர் அந்தக் குற்றவாளியை அழைத்துக் கொண்டு சிறைச்சாலைக்குச் சென்றவுடன்தான் இவனுக்கு தண்டனையே ஆரம்பிக்கும். போலீஸ்காரர் அழைத்துப் போகவில்லை என்றால் இவனைப் பற்றிய தீர்ப்பு புத்தகத்தில்தான் இருக்கும். அதேபோல் இறைவன் என்னதான் தண்டனை விதித்தாலும் தண்டனையை கொடுப்பதற்கு யார் இருக்கிறார்கள், என்பதே அடுத்த எதிர்ப்பு.

இறைவன் விதித்த தண்டனையை நமக்கு எல்லாம் அளிப்பதற்காகத்தான் யமதர்மராஜன் என்று ஒருவர் இருக் கிறார். அந்த யமதர்மராஜன்,

''அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ
புன: புனர்வசமாபத்யதே மே ।''

Sri Vidyabharati Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(எவனொருவன் 'இந்த உலகம் மட்டும்தான் இருக்கிறது. மறு உலகம் இல்லை' என்று கருதுகின்றானோ அவன் மீண்டும், மீண்டும் எனது கட்டுப்பாட்டிற்கு வருகிறான்). நாம் மறு உலகம் இல்லை என்று கூறிக் கொண்டிருந்தாலும் யமனுக்கு அதனால் எந்தவித கஷ்டமும் இல்லை.

''அயம் லோகோ நாஸ்தி பர இதி மானீ''

என்று கூறப்பட்டிருப்பதுபோல் திருடனும் நினைத்துக்கொண்டிருப்பான். எனக்குள்ள புத்திசாலித்தனத்திற்கும் சாமர்த்தியத்திற்கும் முன்னால் போலீஸ்காரனின் புத்திசாலித்தனம் எம்மாத்திரம்? எவ்வளவோ தடவைகள் போலீஸ்காரன் கண்ணில் மண்ணைத் தூவியிருக்கிறேன் என்று திருடன் சொல்லிக்கொண்டேயிருப்பான். ஆனால் ஒரு விஷயத்தை அறிந்துகொள்ள வேண்டும். கன்னடத்தில் உள்ள பழமொழி ஒன்றில், 'திருடனின் மனைவி என்றாவது ஒருநாள் விதவை ஆகிவிடுவாள்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் திருடன் பத்து தடவை திருடுவான். பதினைந்தாவது தடவை திருடும் பொழுது மாட்டிக் கொண்டுவிடுவான். அதேபோல் இந்த உலகத்தில் உள்ளவர்களுக்கும் இஹலோகத்தில் (இவ்வுலகில்) அநுபவிக்கும் கர்மா பிரபலமாக இருக்கும் வரையில் அவர்கள் யமனின் பிடியில் அகப்படாமல் இருக்கலாம். ஒருவன் தான் நித்யனாகவே (எப்பொழுதும் இவ்வுலகத்திலேயே) இருந்துவிட்டால், அப்பொழுது யமனின் பிடி எப்படி ஏற்படும் என்று கேட்கலாம். ஆனால் நாம் நித்யர்களாக இருக்கவே முடியாது. அதிலேயும் நோயாளிகள் டாக்டர்களுக்கு பணம் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார்கள். எது வரையில்? ஒரு மருத்துவன் போதாது என்று கருதிச் சென்னைக்கு வருவான். சென்னையில் இருக்கப்பட்ட டாக்டருக்கு பணம் கொடுத்த பிறகு இலண்டனுக்குப் போய் கொடுக்க வேண்டும் என்பான். ஆனால் எதுவரை அவனால் பணம் கொடுத்துக் கொண்டிருக்க முடியும்? பணம் தீர்ந்து போய் விட்ட தென்றாலும், எந்த வைத்தியமும் இவனுக்கு உபயோகப்படாது என்ற நிலைமை வந்தாலும். இவன் தன்

Sri Vidyabharathi Book Centre, Bangalore

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தேஹத்தை விட வேண்டியதுதான். ஆனால் மனிதர்கள் ''நித்யோ வாஸ்யாம்'' என்று கூறப்பட்டிருப்பது போல் தாங்கள் என்றுமே நிலையானவர்கள்தான் என்று நினைத்துக் கொண்டிருந்தாலும் யமன் ஒருநாள் அவர்களை துன்புறுத்தத் தான் செய்வான். நாம் எவ்வளவு வைத்தியர்களை நம் அருகே வைத்துக் கொண்டு நமக்கு மருத்துவம் பார்க்கச் சொன்னாலும் யமன் நம்மை கொண்டு போகாமல் விடமாட்டான். ஏனென்றால் அந்த யமன்தான் அந்த வைத்தியர்களை ஒரு நாள் கொண்டு போகத் தயாராக இருக்கிறான். அப்படிப் பட்ட யமன் நம்மை மட்டும் எதற்காக விடப்போகிறான்?

வீட்டில் வைக்கப்பட்டிருந்த வடை ஒன்றை ஒரு சிறு பிராணி சாப்பிட்டுக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த பெரிய எலி ஒன்று அந்த வடையையும் சாப்பிட்டது; அதைச் சாப்பிட்டுக் கொண்டிருந்த பிராணியையும் சாப்பிட்டு விட்டது. அது போல யமன், எவர்களினால் நாம் காப்பாற்றப் படுவோம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோமோ, அப்படிப் பட்ட மருத்துவர்களை மட்டும் விட்டுவிடப் போவதில்லை. அவர்களையும் அவர்கள் வைத்தியம் பார்க்கும் நோயாளிகளை யும் அவன் ஒருநாள் அழைத்துக் கொண்டுதான் போகப் போகிறான். ஆனால் அப்படிப்பட்ட யமன், ஒருவனை மட்டும் ஒன்றும் செய்ய மாட்டான். யார் அந்த ஒருவன்?

''காமமஸ்து ஜகத்ஸர்வம் காலஸ்யாஸ்ய வசம்வதம் |
காலகாலம் ப்ரஸன்னஞ்ஞம் கால: கிம்நகரிஷ்யதி ||''

(இந்தக் கலிகால வசத்திற்கு வந்த அனைத்துலகமும் எப்படி வேண்டுமானாலும் இருக்கட்டும். காலனுக்கே கால னானவனை காலன் என்ன செய்ய முடியும்?) எவன் காலனைக் கூட எரித்து விடுவானோ அப்படிப்பட்ட காலகாலனையே நாம் சரணமடைந்தால் யமதர்மராஜன் அப்பேற்பட்டவனை ஒன்றும் செய்யமாட்டான். ஆனால் அதற்காக யாரும் முயற்சி செய்வதாகத் தெரியவில்லை.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

உலகத்தில் மனிதர்களுக்கு பல ஆயுதங்கள் இருக்கின்றன. அவை எவை என்றால்,

சப்தாதிபி: பஞ்சபிரேவ பஞ்ச பஞ்சத்வமாபு:
ஸ்வகுணேன பத்த: |
குரங்க - மாதங்க - பதங்க - மீன - ப்ருங்கா
நர: பஞ்சபிரஞ்சித: கிம் ii

(மான், யானை, விட்டில் பூச்சி, மீன், தேனீ இவைகள் ஒலி, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் இவைகளில் முறையாகப் பற்றுதல் வைத்ததால் நாசம் அடைந்தன. ஐந்துடனும் சம்பந்தம் வைத்திருக்கும் மனிதனது கதி என்ன?)

என்று சங்கரபகவத்பாதாள் கூறியிருக்கிறார். சாமான்யமாக ஒவ்வொரு விஷயத்திலும் ஒரு ஜீவன் பற்று வைத்து அத் தகைய பற்றினால் தன் உயிரையே மாய்த்துக் கொண்டுவிடும் என்று ஸ்லோகத்தில் அவர் கூறியுள்ளதை நாம் பார்க்கப் போகிறோம்.

மான் பிடிக்கப் போகும் வேடன், முதலில் காட்டிலே இனிமையான சங்கீதத்தை வாசிக்க ஏற்பாடு செய்வான். மான் தன் காதிற்கு அத்தகைய சங்கீதம் மிகவும் அற்புதமாக இருக்கிறது என்று நினைத்து சப்தம் கேட்கும் இடத்திற்கு ஓடிவரும். ஆனால் அந்த இடத்தில் வேடன் வலை ஒன்றை விரித்திருப்பான். சப்தத்தைக் கேட்க ஆசையுடன் வரும் மான்களுக்கு கீழே விரித்திருக்கும் வலை கண்களுக்கே தெரி யாது. ஏதோ இனிமையான சப்தம் கேட்கிறதே என்று அதிலேயே திருப்தியுற்ற மான்கள் கீழே வலை விரித்திருப் பதைப் பார்க்க புத்தியில்லாமல் போய்விடும். பிறகு நேராக வலையில் விழுந்து அகப்பட்டுக் கொள்ளும, சப்தம என்கிற ஒரு புலனுக்காக அது தன் உயிரையே இழக்க நேர்ந்துவிடு கிறது.

யானைகளைப் பழக்குகையில், புதிதாக ஏதாவது ஒரு யானை

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கிடைத்தால் அந்த யானையைக் குழியில் போட்டு விடுவார்கள். யானையைக் குழியில் போட்டுவிட்டாலும் மனிதன் இந்த யானையிடம் போய் உடனே நெருங்கிப் பழகி அதைப் பழக்க முடியாது. அது மனிதனின் வசத்திற்கு வரவேண்டுமென்றால் ஏற்கனவே பழக்கமான ஒரு பெண் யானையை இதற்குத் தேர்ந்தெடுப்பார்கள். எப்படி என்றால் இந்த பெண் யானையின் வயிற்றின் அருகில் பாகன் தன்னை ஒரு துணியால் கட்டிக் கொண்டு இந்தப் பெண் யானையை ஆண் யானையின் அருகில் செல்லுமாறு கட்டளை இடுவான். இந்த பெண் யானை ஆண் யானையின் அருகில் போனாலும் ஆண் யானை ஒன்றும் செய்யாது. ஏனென்றால் தன் இனம் வருகிறது என்று மிகவும் சந்தோஷமாக இருக்கும், பழக்கும் மனிதன், பெண் யானையை, 'ஒரு சங்கிலியை எடுத்து ஆண் யானையின் காலில் போடு' என்பான். பெண் யானையும் அவ்வாறே செய்யும். அப்பொழுது அந்த ஆண் யானைக்கு அது எத்தகைய கோபத்தையும் உண்டாக்காது. ஏனென்றால் அதைப் பொருத்தவரை பெண் யானைதானே தன் காலில் சங்கிலியைப் போடுகிறது என்பதால் அது பேசாமல் இருக்கும். பிறகு பெண் யானை, பாகனது உத்தரவுப்படி இந்த ஆண் யானையை பிடித்து இழுத்தாலும், பெண் யானை எங்கெல்லாம் ஓடுகிறதோ அதன் பின்னால் ஆண் யானையும் ஓடிக் கொண்டேயிருக்கும். இவ்வாறு சில நாட்களிலெல்லாம் ஆண் யானையும் பாகனின் வசத்திற்கு வந்துவிடும். இதைப் போல் ஒரு பெண் யானையைப் பழக்க வேண்டியிருந்தாலும் ஆண் யானையின் உதவியைக் கொண்டு இவ்வாறு செய்வர். ஆகையால் ஒரு பெண் யானையைக் கண்டால் 'அது தன் சகா' என்று நினைத்துத் தன்னுடைய சக்தி எவ்வளவு இருந்தாலும் அது அனைத்தையும் மறந்து இனிமேல் தனக்கு மனிதனால் வரக்கூடிய எல்லா ஆபத்தையும் மறந்து தன்னுடைய வாழ்வு முழுவதையும் அந்த யானை, பாகனது கையில் ஒப்படைத்து விடும். இதற்கெல்லாம் காரணம் யானையானது, ஸ்பர்ச சுகத்தில் (தொடும் இன்பத்தில்) பற்று வைத்து அதனால் தன் வாழ்வையே ஒரு மனிதனுக்கு அர்ப்பணித்து விடுகிறது.

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

நாம் வீட்டில் பூச்சி என்ற ஒரு பூச்சியைப் பார்த்திருக்கிறோம். எங்கேயாவது தீப ஒளியைக் கண்டால் அந்தப் பூச்சியானது 'இந்தத் தீபம் பார்க்க மிகவும் அழகாக இருக்கிறது' என்று நினைத்துக் கொண்டு அந்த தீபத்தை அடித்து அடித்து கடைசியில் அந்த தீபத்திலேயே விழுந்து தன் உயிரை மாய்த்துக் கொண்டு விடுகிறது. (இதற்குக் காரணம்) பார்க்கும் பொருள் மிகவும் அழகாக இருக்கிறது என்று எண்ணி அந்த விட்டில் பூச்சி கடைசியில் அந்தப் பொருளாலேயே தன் உயிரை மாய்த்துக்கொண்டு விடுகிறது.

மீனவன் எவ்வாறு மீன் பிடிக்கிறான்? நிலத்தில் இருக்கக் கூடிய மண்புழுவை தூண்டிலில் அவன் எடுத்துப் போகிறான். தூண்டிலில் ஒரு முள்ளும் இருக்கும். புழுவோடு கூடிய இந்தத் தூண்டிலை நீருக்குள் அவன் விடுகிறான். அதில் மாட்டிக் கொண்டிருக்கும் புழுவைப் பார்க்கும் மீன்கள் புழுவைச் சாப்பிடுவதற்காக தம் வாயை திறந்து தூண்டில் அருகே வருகிறபொழுது அந்தப் புழுவை அவற்றால் விழுங்க முடியாது. ஏனென்றால் புழுவோடு கயிறு ஒன்று கட்டப்பட்டிருக்கும். மீன் புழுவை விழுங்கிவிட முயற்சி செய்யும்போது தூண்டிலில் உள்ள முள்ளில் சிக்கிக்கொண்டுவிடும். கடைசியில் மீன் சுவைக்கு ஆசைப்பட்டு மீனவனின் தூண்டிலில் விழுந்து தன் உயிரையே மாய்த்துக்கொண்டு விடுகிறது.

தேனீ பூக்களில் இருக்கக்கூடிய ரசத்தை நுகர்வதற்காக பூக்களிலேயே இருக்க ஆசைப்படும். ஒரு சமயம் தேனீ ஒன்று தாமரை மலர் ஒன்றில் உட்கார்ந்து அதன் ரசத்தை நுகர்வதிலேயே மிகவும் கவனத்துடன் இருந்தது. ஆனால் இரவு நேரமோ வந்துவிட்டது. இன்னும் அதிலேயே உட்கார்ந்திருக்க வேண்டும் என்ற ஆசையால், தேனீயானது அப்படியே இருக்கும்பொழுது தாமரை மலர் மூடிக் கொண்டு விட்டது.

''ராத்ரிர்கமிஷ்யதி பவிஷ்யதி ஸுப்ரபாதம்
பாஸ்வானுதேஷ்யதி ஹஸிஷ்யதி பங்கஜஶ்ரீ: |

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இத்தம் விசிந்தயதி கோசக தேத்விரேபே
ஹா ஹந்த ஹந்த நலினீம் கஜ உஜ்ஜஹார ||''

('இரவு போய்விடும்; காலை வரும்; ஸூர்யன் உதிப்பான்;: தாமரை மலரும்' என்று இவ்வாறு மலரினுள் சென்ற தேனீ நினைத்தது. அந்தோ! பரிதாபம்! யானை தாமரையைத் தூக்கி எறிந்தது.)

இவ்வாறெல்லாம் அது ''இரவு வரப் போகிறது. சூரியனும் உதிக்கப் போகிறான். நான் மிகவும் உன்னதமான தாமரை மலர் மீது அமர்ந்துகொண்டிருக்கிறேன். இதிலுள்ள மகரந்தத்தை எல்லாம் கொண்டு செல்வதற்காகத்தான் நான் வந்துள்ளேன். பொழுது விடிந்தாலும் எனக்கென்ன நஷ்டம்; விடியற்காலையில் சூரியன் பிரகாசமாக உதித்து விடுவான்'' என்ற ஒரு நம்பிக்கையோடு மேலும் மேலும் தன் காலத்தை அது அங்கேயே கழித்தது. காலையில் அந்த தடாகத்திற்கு நீர் அருந்துவதற்காக நான்கு யானைகள் வந்தன. கோடைக்காலமாதலால் குளிர்ச்சியாக இருந்த நீரைப் பார்த்த யானைகளுக்கு மிகவும் சந்தோஷமாகப் போய்விட்டது.

முதலில் நீருக்காக வந்த யானைகள் நான்கும் ஒன்றன்பின் ஒன்றுகக் குளத்தில் இறங்கிக் குளிக்க ஆரம்பித்தன. யானைகள் குளிக்க ஆரம்பித்தால் தத்தம் தும்பிக்கையால் அப் பிரதேசத்தையே ஒரு கலக்கு கலக்கி விடுவது நாம் அறிந்ததே. இவ்வாறு இரண்டு, மூன்று தடவை அட்டகாசம் செய்துவிட்டு அத்தடாகத்தை விட்டுச் சென்றுல்தான் அவைகளுக்கு குளித்துவிட்டதாக நினைப்பு வரும் போலும். யானைகள் அந்தத் தடாகத்தில் அவ்வாறு குளித்து மகிழ்ந்து கொண்டிருக்கையில் அங்கிருந்த தாமரை மலரெல்லாம் அழிந்து போய்விட்டன. பரிதாபத்திற்கிடமாக, ஒரு தாமரை மலரின் உள்ளேயிருந்த அந்த வண்டும் இறந்து விட்டது.

CC-O. In Public Domain. Digitized by eGangotri

இதே போல் ஒவ்வொரு புலனிலும் பற்றுதல் வைத்துக் கொள்வதால் அந்த ஐந்து பிராணிகள் தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டன என்பதை நாம் பார்த்தோம். மனிதனுக்கோ,

'நர: பஞ்சபிரஞ்சித: கிம்'

என்று கூறப்பட்டவாறு ஒரு புலனில் மட்டும் பற்றுதல் இல்லாமல், அவன் எல்லாப் புலன்களிலும் பற்றுதல் வைத்துக் கொண்டிருக்கிறான். ஐந்து புலன்களும் சொல்வது போலவே தன் வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறான். ஆனால் இவ்வாறு புலன்களின் சொற்படி எப்பொழுதும் கேட்டுக் கொண்டிருக்க முடியாது. ஆகவே மனிதன் சாதிக்க வேண்டியது பகவானின் பாதாரவிந்தங்கள்தாம். ஆனால் நிலைமை இவ்வாறு இருப்பினும் மனிதன் ''புலன்களிலிருந்து தன்னுடைய சிந்தனையை ஒருபோதும் விட மனமே வரவில்லை'' என்று கூறுகிறான். பணம் சம்பாதிக்கும் ஒருவனுக்கு, ''இன்னும் சம்பாதிக்க வேண்டும்; ஒரு லட்சம் வந்தாலும் அது போதாது, இன்னும் பத்து லட்சம் வேண்டும்; இன்னும் பத்து கோடியும் வேண்டும்'' என்று தோன்றும். இவ்வாறு பத்து கோடி அவன் சம்பாதித்த பிறகு நாம் அவனிடம், ''இப்பொழுது பத்து கோடி சம்பாதித்து விட்டாயே, நூறு ரூபாய் தர்மம் செய்'' என்று கூறினால், ''இல்லை. எனக்கு நிறைய பணம் வரட்டும், அப்பொழுது பெரியத் தொகையாகச் செய்கிறேன்'' என்று கூறுவன். ஆனால் பெரிய தொகை வந்த பின்னரும் அவர்கள் அவ்வாறு தர்மம் செய்ய முன்வரமாட்டார்கள்! ஆகவே மனிதனுடைய ஆசைக்கு அளவேயில்லை என்று கூறினால் அது மிகையாகாது.

'மனிதனுக்கு இளம் வயது (யௌவனம்) இருக்கும் போதே அவன் தபஸ் செய்ய வேண்டும்' என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டிருக்கிறது. ஏனென்றால் அவனுக்கு வயதாகி விட்ட பின் அவன் எந்த ஒரு யக்ஞத்தையோ, ஹோமத்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தையோ செய்யவேண்டும் என்று நினைத்தாலும்கூட அவனால் அவ்வாறு செய்ய முடியாமல் போய்விடும். ஒருவன் தன் யௌவனத்தில் உலகத்திலுள்ள சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் (மணம்) போன்ற புலன்களில் பற்றுதல் வைத்து வைராக்யத்தைப் பயிற்சி செய்யலாம் என்று நினைத்தால் அவ்வாறு செய்ய முடியாது. ஏனென்றால் புலன்களின் இயற்கை,

''ந ஜாது காம: காமானுபபோகேன சாம்யதி |
ஹவிஷா க்ருஷ்ணவர்த்மேவ பூய ஏவாபிவர்ததே ||''

(எக்காலத்திலும், ஆசையானது, அதை அனுபவிப்பதனால் அடங்குவதில்லை. மாறாக, போகத்தினால் அது நெய் விடப்பட்ட தீயைப்போல் மேலும் வளர்கிறது).

என்று கூறப்பட்டதுபோல் எந்த ஒரு பொருளையும் அனுபவிப்பதனால் ஒருவனின் ஆசை அடங்கி விடாது. ஒருவன் தனக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம் வந்தால் எவ்வித கவலையும் இல்லை என்பான். சில நாட்களில் ஆயிரம் ரூபாய் சம்பளம் வந்தவுடன் ''இன்னொருவனுக்கு பத்தாயிரம் ரூபாய் சம்பளம் வருகிறதே; எனக்குமட்டும் ஏன் ஆயிரம்'' என்று கேட்பான். தனக்கும் பத்தாயிரம் வந்தால் ''அந்த மனிதன் உட்கார்ந்த இடத்திலிருந்தே மாதா மாதம் ஒரு லட்சம் சம்பாதிக்கிறான். எனக்கு மட்டும் பத்தாயிரம்தானா?'' எனக் கூறுவான். இவ்வாறு அவன் யோசனைக்கு மேல் யோசனை செய்து கொண்டிருந்து தன் ஆயுள் முழுவதையும் இம்மாதிரி யோசனையிலேயே கழித்துவிடுவான். அதேசமயம் அவனுடைய யோசனையின்படிச் சம்பளம் அவனுக்குக் கிடைப்பதில்லை. ஆகவே அவன் யோசனைகளுக்கு ஒரு விலையே இல்லை. மனிதன் இறைவனைப் பற்றிச் சிந்திக்கவோ, தர்மத்தை அனுஷ்டானம் செய்யவோ வேண்டியிருந்தால்,

''அஜராமரவத்ப்ராக்ஜோ வித்யாமர்தம் ச ஸாதயேத் |
க்ருஹீத இவ கேசேஷு ம்ருத்யுனா தர்மமாசரேத் ||''

CC-O. In Public Domain. Digitized by eGangotri

(கற்கும்போதும், சம்பாதிக்கும்போதும், அறிவாளியானவன், தனக்கு மூப்பும் சாவும் கிடையாது என்பதுபோல் பாடுபட வேண்டும். ஆனல், தர்மம் செய்கையில் ஒருவன் தனது தலைமுடியை யமன் பிடித்துக் கொண்டிருக்கிறன் என்பது போல (கருதி), சரிவரச் செய்ய வேண்டும்).

என்று கூறப்பட்டதுபோல் ''ம்ருத்யு தேவதை (யமன்) என்னுடைய தலைமயிரை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறன்,'' என்ற தீர்மானத்திற்கு வந்தால்தான் அவ்வாறு செய்ய முடியும். ஆகவே, 'இறைவனுடைய சாக்ஷாத்காரம் கிடைக்க வேண்டும் என்று எல்லோருக்கும் ஆசை இருந்தாலும், தன் வாழ்நாளைப் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டும் என்ற தீவிர விருப்பம் இருந்தாலும், நடுவில் வந்துள்ள உலக விஷயங்கள் ஒருவனுடைய மனதைத் தவருன பாதையில் இழுத்துக் கொண்டே போகின்றன. முன்பே சொன்னதுபோல் நாம் இவ்வுலகில் நிலையான வாழ்வை என்றுமே பெற முடியாது.

''யேனசாந்த: ஸலிலநிதய: யேன ஸ்ருஷ்டா
ப்ரதித்யௌ |''

(யாரால் ஸமுத்திரமே அருந்தப்பட்டதோ, யாரால் தலி ஸ்வர்கமே உண்டாக்கப்பட்டதோ).

அகஸ்தியர் தன் கையால் கடல் நீரையே ஆசமனம் செய்வதுபோல் சாப்பிட்டுவிட்டார் என்று நாம் கேள்விப் பட்டிருக்கிறோம். அதேபோல் வஸிஷ்டர், ''ஏகேன ப்ருஹ்ம தண்டேன'' (ஒரு ப்ருஹ்ம தண்டத்தினல்) என்று கூறப் பட்டது போல் எப்பேற்பட்ட அஸ்திரங்களையும் தன் ப்ரம்ம தண்டத்தால் தடுத்து நிறுத்தும் சக்தி வாய்ந்தவராக இருந்தார் என்றும் நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பேற்பட்ட மகிமை வாய்ந்தவர்கள் எவ்வளவோ பேர் இருந்திருக்கின்றனர். அதேபோல் உலகத்தையே பயமுறுத்தக்கூடிய பெரிய ஆட்களெல்லாம் இருந்திருக்கின்றனர். அப்படிப்பட்டவர்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

கூட பலகாலம் உயிருடன் இருக்க முடியவில்லை. இச்சூழ்நிலையில் நாம் நிலையாக இருப்பது எப்படி முடியும்? ஒரு பெரிய மருத்துவர் ஜப்பான் நாட்டில் இருந்தாலும் அவருக்கும் ஒருநாள் உடம்பு சரியில்லாமல்தான் போகும். ஏனென்றால்

'ஜாதஸ்ய ஹி த்ருவோ ம்ருத்யு: த்ருவம் ஜன்ம
ம்ருதஸ்ய ச'

(பிறந்தவனுக்கு சாவு நிச்சயம்; இறந்தவனுக்குப் பிறப்பு நிச்சயம்)

என்று கூறப்பட்டதால் பிறந்த பொருளானது என்றும் நித்யமாக இருக்க முடியாது. பிறந்த உடலாக இருப்பதால் ஒருநாள் இந்த உடல் அழியத்தான் வேண்டும். ஆசீர்வாதம் செய்கையில் ''சதா ஆயுஷ்மான்பவ'' என்று பெரியவர்கள் சொல்வார்கள். அதாவது ''நூறு வருஷம் வாழ்வாயாக'' என்று கூறுவர். ஆனால் பலரும் 80 வயது கூடத் தாண்டுவதில்லை. நூறு வயது ஒருவன் வாழ்ந்தாலும் ''80 வயது வரை உலகிலுள்ளவற்றை அனுபவிப்பதிலேயே காலத்தைக் கழித்துவிடலாம். அதன்பின் 20வயது காலம் வைராக்யத்தைப் பயிற்சி செய்வது, இறைவனுடைய சிந்தனை செய்வது என்பதற்காக ஒதுக்கி வைக்கலாம்'' என்று யாராவது நினைத்தால் அவ்வாறு என்றுமே நடக்கப் போவதில்லை. ஏனென்றால்

'யமஸ்ய கருணா நாஸ்தி'

(யமனுக்குக் கருணை இல்லை.)

'ந ஹி யமோऽஸ்ய க்ருதாக்ருதமீக்ஷதே |'

(யமன், ஒருவன் தனது வேலையை முடித்தானா, முடிக்கவில்லையா என்றெல்லாம் பார்க்கமாட்டான்.)

என்று ஓர் இடத்தில் கூறப்பட்டிருக்கிறது. யமன், 'இந்த மனிதன் ஏதாவது காரியம் செய்திருக்கிறானா, இல்லையா'

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

என்றெல்லாம் பார்க்கமாட்டான். ஒருவனுடைய கர்மா தீர்ந்ததும் தன்னுடைய யமலோகத்திற்கு அவன் கூட்டிச் சென்றுவிடுவான். நாம் உலகத்திலேயே பார்ப்போம். பெரிய, பெரிய ஹோட்டல்களிலெல்லாம் அறை ஒன்றுக்கு 250 ரூபாய் என்றெல்லாம் ஒரு நாள் வாடகையாக வசூலிப் பார்கள். அந்த ஒரு நாள் கழிந்து ''அடுத்த நாளும் நான் இந்த அறையில் இருக்கிறேன்'' என்று யாராவது கூறினால் அவனே அனுமதிக்கமாட்டார்கள். மேல் கொண்டு 250 ரூபாய் கொடுத்தால் அவன் அங்கிருக்கலாம். (ஆகவே யமன், மனிதனுடைய கர்மா தீர்ந்ததும் அவனைத் தன் லோகத்திற்கு அழைத்துச் சென்றுவிடுவான்.) தாகம் தீருவதற்காகத் தண் ணீர் சாப்பிடலாம். அதற்காக, தாகம் எடுத்தபோதெல்லாம் ஒவ்வொரு கிணறு தோண்டி அதிலிருந்து சாப்பிடவேண்டும் என்றால் அது எவ்வளவு கடினமான காரியம்! அவன் ஒரு தடவை தாகம் எடுத்தபோது ஒரு கிணறு தோண்டுவான். அடுத்த தடவை தாகம் எடுத்தால் இன்னொரு கிணற்றை அவன் தோண்டவேண்டும்! இதற்கெல்லாம் எவ்வளவு பணம் செலவாகும்! அதேபோல் எவ்வளவு வாழ்வுகளை நாம் பெற்றி ருந்தாலும், ஒரு நாள் இல்லாவிடில் ஒரு நாள் நாம் உயிரை விடவேண்டி வரும். 'Intimation' என்று சொல்லப்படும் அறி விப்பைக் கொடுத்து யமன் நம்மைத் தன் லோகத்திற்கு அழைத்துச் செல்வது கிடையாது. அவன் நேராக ஒருவனைப் பிடித்துவிடுவான்.

வெளியிலே ''இறைவன் உண்டு'' என்று கூறிக்கொண்டு ஒருவன் சுற்ற வேண்டிய தேவையில்லை. நம் மனதிற்குள் யார் உண்டு, யார் இல்லை என்பதை அனுதினமும் நினைத்துக் கொண்டால் அது போதும். உண்மையில், 'தான் யார்' என்பதை மனிதன் புரிந்து கொள்வதில்லை. ஏனென்றால் ஒருவனைப் பொருத்தவரை அவனுக்கு உண்ண உணவு வேண் டும். உடுக்க ஆடை வேண்டும். வசிக்க வீடு வேண்டும். கொஞ்சம் செல்வம் இருந்தால் வெளியில் செல்ல கார் வேண் டும். எத்தனை கோடி ரூபாய் சம்பாதித்தாலும், அவன் இன் னும் அழுதுகொண்டிருப்பானே தவிர தனக்கு இருக்கும்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

செல்வத்தை வைத்துக்கொண்டு திருப்தியுடன் சிரித்துக் கொண்டிருக்க மாட்டான். எப்பேற்பட்ட மகா பிரபுவாக இருந்தாலும் ''மற்ற நகரங்களிலுள்ள எல்லா வியாபாரங்களும் சரியாக நடக்கிறது. ஆனால் அந்த ஊரிலுள்ள என் வியாபாரம் மட்டும் எவ்வளவு கோடி ரூபாய் போட்டாலும் சரியாக நடக்கவில்லை. நான் பத்துக் கோடி ரூபாயை மூலதனமாகப் போட்டேன். அந்த பத்துக் கோடிதான் வந்ததே தவிர மேலே எந்தவித லாபமும் கிடைக்கவில்லை'' என்று பலரும் கூறுவதை நாம் பார்த்திருக்கிறோம். வியாபாரத்தில் இவ்வித நஷ்டமெல்லாம் சகஜம் என்று நினைத்து யாரும் அது குறித்து வருத்தப்படாமல் இருப்பதில்லை. மேலும் மேலும் சம்பாதிக்கவேண்டும் என்ற ஆசைதான் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டே போகிறது இந்த ஆசை எதனால் ஏற்படுகிறது? நாம் சேர்த்து வைத்துள்ள செல்வம் அனைத்தையும் யாருக்குக் கொடுக்கப் போகிறோம் என்ற விஷயம் தெரியாததால்தான் இந்த ஆசை ஏற்படுகிறது. மேலும், 'ஒரு வேளை யமன் இறந்து போனாலும் போகலாம். நான் என்றும் நிலையாக இருந்துவிடுவேன்' என்ற எண்ணம்தான் இதற்குக் காரணம். ''டாக்டர்கள் இறந்து போனாலும் நான் இறந்து போகவேமாட்டேன். நான் என்றும் சாசுவதமாக இருப்பேன் என்ற எண்ணம் 'நித்யோ வாஸ்யாம்' எனக் கூறப்பட்டிருப்பது போல் சாகும் சமயத்தில் கூட ஒருவனுக்கு இருப்பதை நாம் பார்க்கலாம். எனக்கே சில சமயங்களில் வேடிக்கையாகத் தோன்றும். ஒருவனுக்கு 82 வயதாகி இருக்கும். அவர், 'நான் இருமும்பொழுது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனக்கு இருமல் நிற்பதற்கு ஸன்னிதானம் ஏதாவது ஒழி வழி சொல்ல வேண்டும்' என்று கேட்டுக் கொள்வார். 82 வயதான பிறகு இருமல் வந்தால் அதைப் போக்க நாம் என்ன வழியைத்தான் செய்ய முடியும்? வந்த இருமல் அவன் இருக்கும் வரை அதுவும் இருக்கத்தான் போகிறது.

''சக்ஷுஷ்வந்தே சலதி தசனே ச்மச்ருணிச்வேதமானே
ஸீதத்யங்கே மனஸி கலுஷே கம்பமானே கராக்ரே |

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

தூதைரேதைர் தினகரபுவ: சச்வதுத்போத்யமாஞ:
த்ராதும் தேஹம் ததபி பிஷஜாமேவ ஸாந்த்வம்
வதாம: ॥''

என்று நீலகண்ட தீக்ஷிதர் வேடிக்கையாகக் கூறியிருக்கிறார். 80 வயதான ஒருவனுக்குக் கண் சரியாகத் தெரியவில்லை. குருடன் என்ற பெயரும் வாங்கிவிட்டான். அப்போது 'சக்ஷுஷ்வந்தே' எனக் கூறப்பட்டது போல் ஒரு டாக்டரிட மிருந்து இன்னொரு டாக்டர் என்று போய்க்கொண்டேயிருப் பான். டாக்டர், 'ஐயா, உங்கள் கண்ணுக்குச் சக்தியே போய்விட்டது' என்பார். வேறு டாக்டரிடம் சென்றால் அவன் நல்ல மருந்து கொடுப்பான் என்ற ஆசையுடன் இன் னொரு டாக்டரிடம் போவான். ஆனால் எந்த டாக்டருக்கும் வயதாகிவிட்டால் கண் தெரியாமல் போய்விடுகிறது என்பது தீர்மானம்தான்.

'சலிதசனே'

என்று கூறப்பட்டிருப்பது போல் ஒருவனுக்கு பற்கள் விழுந்து விட்டன.

'ச்மச்ருணிச்வேதமானே'

என்று கூறியது போல் முடியெல்லாம் நரைத்துவிட்டன. பின் உடம்பெல்லாம் நடுங்குகிறது. ஒரு சமயம் மேடையில் ஒரு வயதான பெரியவர் உட்கார்ந்திருந்தார். அப்பொழுது மேடையில் ஏறி வந்த ஒருவர் பூமாலை ஒன்றை அவரிடம் கொடுக்கச் செல்லுகையில் மற்றவர்கள், ''அந்தப் பூமாலையை அவரிடம் கொடுக்காதீர்கள்'' என்று கூறினார்கள். ஏனென் றால் அவர் அந்த மாலையை கையில் பிடித்துக் கொண்டாலே மாலையிலுள்ள மலரெல்லாம் உதிர்ந்து போய்விடும். அந்த வயதானவரின் கை அவ்வாறு ஆடுகிறது. அது மட்டுமில்லை. 'மனஸிகலுஷே' என்று கூறப்பட்டதுபோல் அவருடைய ஞாபக மறதி மிகவும் அதிகமாகிவிட்டது. யாராவது வந்தால்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

''நீ ராமா சாஸ்திரியா? கோபால சாஸ்திரியா?'' என்று கேட் பார். இதெல்லாம் பார்த்து நாம் என்ன தெரிந்துகொள்ள வேண்டுமென்றால்,

''தூதைரேதைர்தினகரபுவ: சச்வதுத்போத்யமானு: த்ராதும் தேஹம் ததபி பிஷஜாமேவ ஸாந்த்வம் வதாம: ||''

என்று கூறப்பட்டது போல் ஒரு வியாதி வடிவாக யமதூதர் களில் ஒருவன் வந்தான். அப்பொழுது மனிதன் 'நான் வர மாட்டேன்' என்று மறுத்தால், இன்னொரு வியாதி வடிவமாக யமனின் இன்னொரு தூதன் வருகிறான். இப்பொழுதும் ஒரு வன் மறுத்துவிட்டால் பல வியாதிகள் வடிவாக அவனிடம் நான்கு, ஐந்து தூதர்கள் வருகின்றனர். ஒரு தூதன் வந்தா லும் பரவாயில்லை. பல பேர் வந்தால் ''நான் வரமாட் டேன்'' என்றாலும் யமதூதர்கள் தூக்கிக்கொண்டு போய் விடுவார்கள். ஆகவே மனிதர்கள் பல டாக்டர்களிடம் மாறி மாறிப் போய் பணத்தைக் கொடுத்துக்கொண்டிருப்பார்களே தவிர தம்முடைய வாஸ்தவமான நிலையை யோசனை செய்யவே மாட்டார்கள். அப்பேற்பட்ட மனிதனைக் காட்டி லும் முட்டாள் ஒருவனும் இருக்கமாட்டான்.

இக்காலத்தில் நான் சில மனிதர்களைப் பார்த்திருக் கிறேன். அவர்கள் பெரிய பதவியில் இருந்திருப்பார்கள். ஒரு நாள் அப்பேற்பட்ட மனிதர் ஒருவர் டாக்டரிடம் சென்று விட்ட பிறகு ''உங்களுக்கு ஹிருதயம் சரியில்லை; 'ப்ளட்பிரஷ ரும்' ஜாஸ்தியாக இருக்கிறது. சர்க்கரை வியாதியும் இருக் கிறது'' என்று கூறிவிட்டால், அவர் உடனே தன்னுடைய அலுவலகத்தில் வேலை பார்த்த மற்றவர்களுக்கு ஒரு கடிதம் எழுதிவிடுவார். ''நான் என் பதவியில் இருக்கும்பொழுது உங்களையெல்லாம் ஏதாவது அவதூறுகப் பேசியிருக்கலாம். என் வார்த்தைகள் உங்கள் மனதைப் புண்படுத்தியிருக்க லாம். நான் பதவியில் இருக்கும்பொழுது, இவ்வாறு செய் ததை யெல்லாம் நீங்கள் மன்னிக்க வேண்டியது. உங்கள்

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

எல்லோர் மேலும் எனக்குச் சமமான அன்பு உண்டு'' என்று அப்பேற்பட்டவர் கடிதம் எழுதிவிடுவார். ஆனல் ஏதாவது வியாதி வந்தால்தான் இவ்வாறு மன்னிப்பு கேட்க அந்த மனிதர் முன்வருவார். அது வருவதற்கு முன்னமே தான் பதவியில் இருந்த சமயத்தில் மற்றவர்களைச் சரிவர நடத்தி அவர்களிடம் அன்பு செலுத்தி வந்தால் இப்பொழுது ஏன் அவர் மன்னிப்பு கேட்க வேண்டும்? ஏனெனில் முன்னல் மன்னிப்பு கேட்டால் தன் மரியாதைக்கு அது குறைவு என்று அவர் நினைத்து விடுவார்.

ஒருவனுடைய தலையில் நெருப்புப் பிடித்துவிட்டால் அவன் ஆற்றில் இறங்க வேண்டுமா அல்லது குளத்தில் இறங்க வேண்டுமா? இந்தக் குளத்தில் குளிக்கலாமா; இது நல்ல தண்ணீரா என்றெல்லாம் யோசித்துக்கொண்டிருக்க மாட்டான். ஏதாவது தண்ணீரைப் பார்த்தால் உடனே அதில் இறங்கி ஒரு முங்கு முங்கி எழுந்திருப்பான். அதே போல் நாம் இத்தகைய சிந்தனையை (ஸ்லோகத்தில் கூறியுள்ளவாறு) வைத்துக் கொண்டால், நம் மனதில் தர்மத்தைப் பின்பற்ற வேண்டும் என்ற எண்ணம் தானாக வந்துவிடும். நாம் இந்த உலகத்தில் நிலையானவர்கள் என்றெல்லாம் நினைத்துக்கொண்டு இறைவனைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இருக்கிறோம். ஆனலும் நம் எல்லோருக்கும் பரமாத்மாவைப் பற்றி சிந்தனை செய்ய வேண்டும் என்ற ஆசை உண்டு. பரமாத்மாவின் சாக்ஷாத்காரம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உண்டு. ஆனல் உண்மையாக, உலகத்திலுள்ள மக்கள் நிலை இவ்வாறு இருப்பதால் ஆன்மிக வழியில் யாரும் போவதில்லை. ஆகவே இந்த உடல் என்பது என்றும் நிலையில்லை. உலகம் என்பதும் நிலையில்லை. இந்த மனிதச் சரீரம் நமக்குக் கிடைத்திடும் வேளையில் நாம் இதைச் சரிவர பயன்படுத்தி நற்கதியைச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வந்துவிட்டால் அப்பொழுது மனது என்பது வேறு எந்த விஷயத்திலும் அலையாது. ஆகவே இத்தகைய பாவனையை நாம் எல்லோரும் கொள்ள வேண்டும் என்று

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

அப்பய்ய தீக்ஷிதர் மிகவும் சுவாரஸ்யமாக அந்த ஸ்லோகத்தில் கூறியுள்ளார். நாம் அவர் கூறியபடி நடந்துகொண்டு சிரேயஸ்ஸை அடையவேண்டும்.

ஹர நம: பார்வதீ பதயே! ஹரஹர மஹாதேவ!!
ஜானகீ காந்த ஸ்மரணம்! ஜய ஜய ராம ராம!!

———

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri

CC-O. In Public Domain. Digitized by eGangotri

Sri Vidyabharathi Book Centre, Sringeri